# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109777

1. District மாவட்டம் : Kanchipuram PS காவல்நிலையம்: VAC Kanchipuram Year ஆண்டு: 2023 FIR No. மு.த.அ. எண்: Cr No 05/AC/2023/KM Date நாள்: 25.08.2023 10.30 hrs.

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 [as amended in 2018] Sections பிரிவுகள்: 7

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல்: 10.8.23 Date to நாள் வரை: @ 12.00 hrs

Time Period நேர அளவு : Time from நேரம் முதல்: 11.8.23 / 22.8.23 Time to நேரம் வரை: @ 12.30 hrs / @ 11.15 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.08.23 Time நேரம் : @ 09.00 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 25.08.23 Time நேரம் : @ 09.00 hrs & 10.30 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் South East About 4 km

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி O/o the District Registrar Orikkai, Kanchipuram.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

Seen
[signature]
25/8/23

Seen
[signature]
25/8/23

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. Ulaganathan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Ragavan

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 46/23 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation தொழில் : Travell Agency (g) Address : முகவரி No. 21/16, Elango Street, Nehru Nagar Velacheri, Chennai-42.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Naveen, Assistant.
O/o the District Registrar, Orikkai, Kanchipuram.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)
Demanded Rs.1,00,000/- as bribe.

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Separate sheet attached.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed G. Annadurai Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS V&AC, Kanchipuram on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 25/08/2023 [signature] 25/08/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 25.08.23 / 1300 hrs.

Name: பெயர் G. Annadurai
Rank: நிலை Inspector of Police, Kanchipuram, V&AC. No. எண் ..........

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.05/AC/2023/KM, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)**

பணிந்து அனுப்பப்படுகிறது

இன்று 25.08.2023-ந் தேதி காலை சுமார் 09.00 மணியளவில் காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் காவல் ஆய்வாளராகிய நான் ஆஜரில் இருந்தபோது, R.உலகநாதன், வயது-46, த/பெ. ராகவன், எண்.21/16, இளங்கோ தெரு, நேரு நகர், வேளச்சேரி, சென்னை-42, என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் விவரம் பின்வருமாறு., பெறுநர், உயர்திரு காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, கஞ்சிபுரம், ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் தற்போது சென்னை வேளச்சேரியில் டிராவல் ஏஜென்சி வைத்து நடத்தி வருகிறேன், நான் எனது தாய்மாமன் திரு.மணிப்பிள்ளை அவர்களின் மகள் சுகந்தாவை திருமணம் செய்து கொண்டேன், எனது மாமியார் பெயர் திருமதி.பத்மாவதி, எனது மாமியாருடன் உடன் பிறந்தவர்கள் அண்ணன் திரு.பச்சையப்பன் மற்றும் தம்பி திரு.மூர்த்தி ஆவார்கள். அவர்கள் அனைவரும் மும்பையில் அவர்களது குடும்பத்துடன் வசித்து வருகிறார்கள். எனது மாமியாரின் தந்தை திரு.டில்லிபாலையா அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் வட்டம், பண்ருட்டி கிராம சர்வே எண்.72/1B, 72/1D, 72/1E-ல் உள்ளடக்கிய மொத்தம் 1 ஏக்கர் 46 செண்ட் விவசாய நிலத்தினை அவரது பெயரில் கிரையம் பெற்று வாலாஜாபாத் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ளார். பின்னர் அவர் அந்நிலத்தினை கடந்த 2008-ல் அவருடைய மூத்த மகன் திரு.பச்சையப்பனுக்கு பொது அதிகாரம் வழங்கி வாலாஜாபாத் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்துள்ளார். பின்பு திரு.டில்லிபாலையா அவர்கள் உடல்நிலை குறைவால் கடந்த 07.02.2018-ந்தேதி மும்பையில் இறந்துவிட்டார். அதன்பின்பு திரு.பச்சையப்பன் அவருக்கு கொடுத்த பொது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி, திரு.டில்லிபாலையா அவர்கள் உயிருடன் இருப்பதாக பொய்யான வாழ்நாள் சான்று மருத்துவரிடம் பெற்று, வாரிசுதாரர்களுக்கு தெரிவிக்காமல் அவராகவே மேற்படி நிலத்தினை 1)திருமதி.உஷா, 2)திரு.சபரி, 3)திருமதி.பவானி மற்றும் 4)திருமதி.ரேவதி ஆகியோருக்கு கிரையத்திற்கு, கடந்த 12.09.2018-ந்தேதி வாலாஜாபாத் சார்-பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்துள்ளார். பின்னர் எனது மாமியார் மேற்படி போலியான 4 கிரைய ஆவணங்களை ரத்து செய்யவேண்டி, கடந்த 15.11.2021-ந்தேதி காஞ்சிபுரம் மாவட்ட பதிவாளர் அவர்களுக்கு மனு

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.05/AC/2023/KM, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)**

கொடுத்தார். மேலும் எனது மாமனார் மற்றும் மாமியார் மும்பையில் வசிப்பதால், என் மாமியார்கொடுத்த மனுவினை காஞ்சிபுரம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று நான் கவனித்து வந்தேன். அந்த மனுவின்மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் நிலுவையில் இருந்ததால், அம்மனு மீது உரிய நடவடிக்கை எடுக்க எனது மாமியார் எனது உதவியுடன் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். பின்னர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் W.P.No.25614 of 2022 -ல் கண்ட உத்தரவின்படி காஞ்சிபுரம் மாவட்ட பதிவாளர் அவர்களுக்கு எனது மாமியார் கொடுத்த மனுவின்மீது பணிரெண்டு வாரத்திற்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பின்னர் காஞ்சிபுரம் மாவட்ட பதிவாளர் அவர்கள் மனுவின்மீது விசாரணை மேற்கொள்ளும்போது, எனது மாமியாருக்கு உதவியாக நான் சென்று வருவேன். மேற்படி மனுவின்மீது இறுதி ஆணை வழங்காமல் நிலுவையில் இருந்தமையால், இது தொடர்பாக எனது மாமனார் திரு.மணிப்பிள்ளை, அவரது சகோதரர் திரு.இராஜேந்திரனுடன் கடந்த 10.08.2023-ந்தேதி பகல் சுமார் 12.00 மணியளவில் காஞ்சிபுரம் மாவட்ட பதிவாளர் அலுவலகம் சென்று, மாவட்ட பதிவாளர் திரு.முரளி அவர்களை சந்தித்து மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து கேட்டுள்ளார், அதற்கு மாவட்ட பதிவாளர் மனுவின் மீது விசாரணை முடிந்துவிட்டதாகவும், இறுதி ஆணை பிறப்பித்துள்ளதாகவும், உதவியாளர் திரு.நவீனை சந்திக்குமாறு தெரிவித்துள்ளார், அதன்படி அவர்கள் இருவரும் உதவியாளர் திரு.நவீனை அலுவலகத்தில் பார்த்தபோது, மாவட்ட பதிவாளர் உத்தரவிட்ட இறுதி ஆணை வழங்கவேண்டும் என்றால், தனக்கு பணம் ரூ.2,00,000/- கொடுக்கவேண்டும் என்று கேட்டுள்ளார். அதற்கு எனது மாமனார் அவ்வளவு பணம் என்னிடம் இல்லை என்று தெரிவித்துவிட்டு வீட்டிற்கு வந்து, என்னிடமும் எனது மாமியாரிடமும் மேற்படி தகவலை தெரவித்தார். அதன் பின்னர் நான் கடந்த 11.08.2023-ந்தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு காஞ்சிபுரம் மாவட்ட பதிவாளர் அலுவலகம் சென்று, உதவியாளர் திரு.நவீனை சந்தித்து இறுதி ஆணை குறித்து கேட்டபோது, அதற்கு அவர் தனக்கு பணம் ரூ.2,00,000/- தந்தால்தான் இறுதி ஆணையை தருவேன் என்று தெரிவித்தார். நான் அவ்வளவு பணம் இல்லை என்று தெரிவித்துவிட்டு வந்துவிட்டேன். பின்னர் பல நாட்களாகியும் மாவட்ட பதிவாளர் அவர்களின் உத்தரவு ஆணை பெற முடியாததால், மீண்டும் கடந்த 22.08.2023-ந்தேதி காலை சுமார் 11.15 மணிக்கு நான், எனது மாமனார் மற்றும் மாமியார்

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.05/AC/2023/KM, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)**

ஆகியோருடன் காஞ்சிபுரம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று, மாவட்ட பதிவாளர் அவர்களை சந்தித்து, எனது மாமியார் ஆணை தொடர்பாக கேட்டதற்கு, மாவட்ட பதிவாளர் அவர்கள் இறுதி ஆணை உத்தரவினை திரு.நவீனிடம் வாங்கிக்கொள்ளுமாறு தெரிவித்தார், அதன்பின்பு நாங்கள் மூவரும் சேர்ந்து திரு.நவீன் உதவியாளரை சந்தித்து, மாவட்ட பதிவாளர் தெரிவித்ததை தெரிவித்து இறுதி ஆணையை கேட்டபோது, அவர் எனது மாமியாரிடம் அலுவலக பதிவேட்டில் கையொப்பம் பெற்றுக்கொண்டு, மாவட்ட பதிவாளர் பிறப்பித்த 09.08.2023 தேதியிட்ட செயல்முறை ஆணையினை கொடுத்துவிட்டு, அவர் ஏற்கனவே கேட்டிருந்த பணம் ரூ.2,00,000/- கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டார். அதற்கு நாங்கள் அவ்வளவு பணம் தரமுடியாது என்று தெரிவித்தோம், அதற்கு திரு.நவீன் மாவட்ட பதிவாளரின் செயல்முறை ஆணையை வாலாஜாபாத் சார்பதிவாளர் அலுவலகதத்திற்கு நான் தான் அனுப்பி, போலியாக பதிவு செய்யப்பட்ட 4 ஆவணங்களை ரத்து செய்து, வில்லங்கச்சான்றில் மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்து, ஏற்கனவே அவர் கேட்ட பணம் ரூ.2,00,000/-தை ரூ.1,00,000/-மாக குறைத்துக்கொண்டு வரும் வெள்ளிக்கிழமைக்குள் (25.08.2023) தன்னுடைய அலுவலகத்திற்கு வந்து தன்னை சந்தித்து அவர் கேட்ட பணம் ரூ.1,00,000/-த்தை கொடுத்தால்தான், மாவட்ட பதிவாளர் உத்தரவு ஆணையை வாலாஜாபாத் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பி உரிய நடவடிக்கை மேற்கொள்வேன் என்றும் தெரிவித்து எங்களை மாவட்ட பதிவாளர் அவர்களை மீண்டும் சந்திக்கவிடாமல் அனுப்பிவிட்டார். எங்கள் மூவருக்கும் காஞ்சிபுரம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் திரு.நவீன் கேட்ட லஞ்சப்பணம் ரூ.1,00,000/-த்தை கொடுக்க விருப்பம் இல்லாததால், எனது மாமியார் பணம் ரூ.1,00,000/-த்தை கொடுத்து, காஞ்சிபுரம் விஜிலன்ஸ் அலுவலகத்திற்கு சென்று புகார் கொடுக்கும்படி தெரிவித்தார், மேற்படி பணத்தை ஏற்பாடு செய்ய காலதாமதம் ஆனதால், மேற்படி லஞ்சப்பணம் ரூ.1,00,000/-த்துடன், இன்று 25.08.2023-ந்தேதி காலை காஞ்சிபுரம் விஜிலன்ஸ் அலுவலகத்திற்கு வந்து லஞ்சப்பணம் கேட்ட காஞ்சிபுரம் மாவட்ட பதிவாளர் அலுவலகததில் பணிபுரியும் உதவியாளர் திரு.நவீன் என்பவர் மீது சட்ட நடிவடிக்கை மேற்கொள்ள இப்புகார் மனுவினை தங்களிடம் கொடுக்கிறேன். மேலும் தாங்கள்

**(FIR contents, continues to next page.....)**

240-1(Type-1) 10,45,700+3 Cps--21-04-2021--(HP-32)

**(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.04/AC/2023/KM, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) continues . . .)**

எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கைக்கு நான் முழு ஒத்துழைப்பு கொடுக்கிறேன் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிக்கு, SdXXX R.Ulaganathan, 25.08.2023.

**Honoured Madam,**

I received the above complainant on 25.08.2023 at 09.00 hrs, after verifying the antecendents of the accused and credibility of the complainant. After obtaining permission from the DVAC, Chennai, I have registered a case in Kanchipuram V&AC, Cr.No.5/AC/2023/KM, u/s. 7 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) on 25.08.2023 at 10.30 hrs. The original FIR along with complainant sent to the Hon'ble CJM cum Special Judge, Chengalpet. Copies send to the Officers concerned and took-up the investigation.

G.A. [signature]
25/08/2023
(G. Annadurai)
Inspector of Police
Vigilance and Anti-Corruption
Kanchipuram-631501